**த. நா.ச.பே. எண் : 010** **நாள் : 10.07.2019**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண்.110–ன் கீழ்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே.பழனிசாமி** அவர்களின் அறிக்கை – 10.7.2019

---

**<u>ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை</u>**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!**

**1.** மாண்புமிகு அம்மா அவர்கள் **2015–16**ஆம் ஆண்டில், தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தினை **800** கோடி ரூபாய் மதிப்பீட்டில் அறிமுகப்படுத்தினார்கள். மாண்புமிகு அம்மாவின் அரசால் இதற்கான நிதி ஒதுக்கீடு கடந்த **2018–19**–ஆம் ஆண்டில் **1,200** கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டது.

**அதன் தொடர்ச்சியாக, நடப்பாண்டிலும் 1,200 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும். இதன் மூலம், 5,000 கி.மீ. நீளமுள்ள ஊரகச் சாலைகள் மேம்படுத்தப்படும்.**

**2.** "கஜா'' புயலினால் கட்டடங்கள், சாலைகள் மற்றும் பாலங்களுக்கு அதிக அளவிலான பாதிப்புகள் ஏற்பட்டன. இதனை கருத்தில் கொண்டு, **கஜா புயலினால் பாதிக்கப்பட்ட நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை மாவட்டங்கள் மற்றும் திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் கோட்டத்திற்குட்பட்ட சேதமடைந்த சாலைகள் மற்றும் பாலங்களில் மறுசீரமைப்புப் பணிகள் 200 கோடியே 53 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.**

**3.** பழுதடைந்த கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய தார்ச் சாலைகளை வலுப்படுத்தவும், தார் இடப்படாத சாலைகளை தார்ச் சாலைகளாக மேம்படுத்தவும், **நடப்பு ஆண்டில் 255 கோடியே 21 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஊரக சாலைகள் மேம்பாடு மற்றும் பாலங்கள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும்.**

**4.** ஊரகப் பகுதிகளில், குடியிருப்புகளின் சமையலறை மற்றும் குளியலறைகளிலிருந்து வெளியேறும் கழிவு நீர், சாலைகள் மற்றும் தெருக்களில் தேங்காமல் தடுத்திடவும், நீர் வடிக்கப்பட்டு நிலத்தடி நீர் செறிவூட்டவும், நோய் தொற்று ஏற்படாமல் பாதுகாக்கவும், தனிநபர் உறிஞ்சுக் குழிகள் அமைக்கவும், ஊரகப் பகுதிகளில், ஆழ்துளை கிணறு, மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி மற்றும் கழிவு நீர் வடிகால்களைச் சுற்றி கழிவு நீர் தேங்காமல் தடுத்திட **2 லட்சத்து 500 சமுதாய உறிஞ்சுக் குழிகள், 183 கோடியே 38 லட்சம் ரூபாய் செலவில் நடப்பாண்டில் அமைக்கப்படும்.**

**5.** கிராமப் புறங்களில் தண்ணீரை சேமித்து பாசனத்திற்கு பயன்படுத்திடவும், நிலத்தடி நீர் மட்டத்தினை உயர்த்திடவும், தமிழ்நாட்டின் ஊரகப் பகுதிகளில் உள்ள வாய்க்கால்கள், ஓடைகள் மற்றும் கால்வாய்களின் குறுக்கே மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட பணியாளர்களைக் கொண்டு **நடப்பாண்டில் 10,000 தடுப்பணைகள் 312 கோடி ரூபாய் செலவில் கட்டப்படும்.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

ஊரக மற்றும் நகர்ப்புர மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு குறித்த நேரத்தில், குறைந்த வட்டி விகிதத்தில் போதுமான கடன் கிடைக்க வழிவகை செய்ய கடந்த 2018–19 ஆம் ஆண்டு சட்டப்பேரவையில் விதி எண் 110ன் கீழ் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக்கடன் இணைப்பாக 11 ஆயிரம் கோடி ரூபாய் வழங்கப்படும் என்ற இலக்கு அறிவிக்கப்பட்டது. ஆனால், அந்த இலக்கினையும் விஞ்சி 11 ஆயிரத்து 449 கோடி ரூபாய் கடன், வங்கிகள் மூலம் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது என்பதை நான் மகிழ்ச்சியுடன் இந்த அவையில் தெரிவித்துக் கொள்கிறேன்.

**நடப்பாண்டில், மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன் இணைப்பின் மூலம் 12 ஆயிரத்து 500 கோடி ரூபாய் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது** என்பதை நான் இந்த அவையில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

2. **தேசிய ஊரக பொருளாதார புத்தாக்கத் திட்டம் என்ற புதிய திட்டம், நடப்பு ஆண்டு முதல் செயல்படுத்தப்பட உள்ளது. இத்திட்டம் நடப்பாண்டு முதல் அடுத்த 4 ஆண்டுகளுக்கு 210.27 கோடி ரூபாய் மதிப்பீட்டில், கடலூர், ஈரோடு, சேலம், தஞ்சாவூர் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய 5 மாவட்டங்களில் தலா 4 வட்டாரங்களில் செயல்படுத்தப்படும். இவ்வாண்டு இத்திட்டத்திற்கு 40.61 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.** வட்டார அளவில் மேம்படுத்தப்பட்ட வலுவான கூட்டமைப்பை உருவாக்குதல், இணையவழி நிதி பறிமாற்றம், பண்ணை சார்ந்த மற்றும் பண்ணை சாராத பிரிவுகளில் தனிநபர் மற்றும் கூட்டு தொழிலுக்கான வணிக மேம்பாட்டினை ஊக்குவித்தல் போன்றவை இத்திட்டத்தின் மூலம் செயல்படுத்தப்படும்.

3. ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனங்கள் மூலம் பல்வேறு தொழில் நிறுவனங்களின் தேவைக்கு ஏற்ப கிராம மற்றும் நகர்ப்புர இளைஞர்கள் திறன் பயிற்சி பெற வழிவகை செய்யப்படும்.

இதற்காக, **நடப்பு ஆண்டில் 125 கோடி ரூபாய் செலவில் 25,000 இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புடன் கூடிய பயிற்சிகள் வழங்கப்படும்.**

4. பல்லவன் கிராம வங்கி மற்றும் பாண்டியன் கிராம வங்கி ஆகிய இரண்டு மண்டல ஊரக வங்கிகள் 1.4.2019 அன்று ஒருங்கிணைந்து, மாநிலம் முழுவதும் 630 கிளைகளைக் கொண்டு **தமிழ்நாடு கிராம வங்கி** என்ற பெயரில் சேலத்தினை தலைமையிடமாகக் கொண்டு செயல்படுகின்றது. இதற்கென **தமிழ்நாடு கிராம வங்கியும் ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனமும் ஒருங்கிணைந்த ஒரு வளாகம் அமைக்க சேலத்தில் 2 ஏக்கர் அரசு நிலம் வழங்கப்படும்.** இவ்வளாகம், வாழ்க்கைத் தொழில் சார்ந்த பயிற்சிகள் அனைத்தையும் வழங்கும் ஒரு மையமாக செயல்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

## நீதிமன்றங்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

**1.** சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தில் தற்போது இயங்கி வரும் பல்வேறு சார் நீதிமன்றங்களுக்கு கூடுதல் இடம் அளிப்பதற்காக **202.40 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு அடுக்குமாடிக் கட்டடம் கட்டப்படும்.**

**2. தூத்துக்குடி மாவட்டம் ஸ்ரீவைகுண்டத்தில்** மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்களுக்கான **ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம்,** வாகனம் நிறுத்தம், உணவக கட்டடம் மற்றும் பொது கழிப்பிடம் போன்ற கூடுதல் வசதிகளுடன் **5.09 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.**

**3. நாமக்கல் மாவட்டம் பரமத்தியில் ஒருங்கிணைந்த நீதிமன்ற கட்டடம்,** சுற்றுச் சுவர், வாகனம் நிறுத்தம், இருசக்கர வாகனம் நிறுத்தம், உணவகம் மற்றும் நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் **10.93 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.**

## சட்டத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

**1.** ஆண்டுதோறும் சட்டக் கல்வி பயில்வதற்காக விண்ணப்பிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே வருகிறது. பொருளாதாரம் மற்றும் சமூகத்தில் பின்தங்கிய குடும்பங்களைச் சார்ந்த மாணவர்களுக்கு குறைந்த செலவில் சட்டக் கல்வியினை வழங்கிட **புதிதாக 3 அரசு சட்டக் கல்லூரிகள் துவங்கப்படும். இதற்காக தலா 3 கோடியே 17 லட்சத்து 50 ஆயிரம் வீதம், மொத்தம் 9 கோடியே 52 லட்சத்து 50 ஆயிரம் செலவில், 2019–2020 கல்வியாண்டு முதல் தொடங்கப்படும்.** உடனடியாக, ஆரம்ப கட்ட பணிகளை மேற்கொள்வதற்காக ஒவ்வொரு கல்லூரிக்கும் ஒரு தனி அலுவலர் நியமிக்கப்படுவார்.

2. கோயமுத்தூர் மற்றும் திருநெல்வேலி அரசு சட்டக் கல்லூரிகளில் மாணவர்களுக்கு **போதுமான உட்கட்டமைப்பு வசதிகளுடன் 7 கோடியே 70 லட்சம் ரூபாய் செலவில் கூடுதல் வகுப்பறைகள் கட்டப்படும்.**

## <u>பதிவுத் துறை</u>

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!**

**சேலத்தில் ஒரு கோடி ரூபாய் மதிப்பீட்டில் துணை பதிவுத் துறை அலுவலகம் மற்றும் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலுள்ள 24 சார்–பதிவாளர் அலுவலகங்களுக்கு 24 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சொந்தக் கட்டடங்கள் கட்டப்படும்.**

2. மேலும், நடப்பாண்டில் **திருச்சிராப்பள்ளியில் வணிகவரி இணை ஆணையர் அலுவலகத்தை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த வணிகவரித் துறை அலுவலக வளாகம் 23.38 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.**

**3.** இணையத்தின் மூலமாக பதிவுத் துறை ஆவணங்களை பதிவு செய்ய ஸ்டார் **2.0** மென்பொருள் வெற்றிகரமாக செயல்பட்டு வருகிறது**.** ஸ்டார் **2.0** மென்பொருள் மூலம் விரைவான மற்றும் வெளிப்படையான சேவை வழங்கப்படுவதால், பொதுமக்களின் ஏகோபித்த வரவேற்பினைப் பெற்றுள்ளது. இதன் சேவைகளை மேலும் செம்மைப்படுத்த **பழைய கணினிகளை மாற்றி புதிய கணினி மற்றும் உபகரணங்கள் 21.63 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வாங்கப்படும்** என்பதை தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்**.**

****

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**